(Under Section 173 BNSS)
(பா.ந.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109783

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 13/2024 Date: நாள் 16.10.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 16.10.2024 Date to : நாள் வரை 16.10.2024

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.45 hrs Time to : நேரம் வரை 20.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.2024 Time : நேரம் 23.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.10.2024 Time : நேரம் 23.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக in typing (Computer)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர் மாவட்டம் சுமார் 35 கி.மீ வடமேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.சு.கருப்பசாமி, 46/2024 (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.சுந்தரமகாலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் - Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர் / மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 2. திரு.சபரிசெல்வம், ஒப்பந்த பணியாளர், தனிநபர்கள் 3. திரு.M.கோவிந்தராஜன், 4. திரு.M.பெருமாள், 5. திரு.S.வெங்கடேஷ், 6. திரு.V.தினேஷ்குமார், 7. திரு.M.மாரிச்சாமி மற்றும் 8. திரு.M.லட்சுமணன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் (L.ராஜு, காவல் துணை கண்காணிப்பாளர்) இன்று 16.10.2024 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்தபோது விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.சு.கருப்பசாமி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள், எதிரிகளின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,620/-, திரு.M.பெருமாள் ஆஜர் செய்த குறிப்புகள் மற்றும் எழுதப்பட்ட இரண்டு வெள்ளைத்தாள்கள் மற்றும் 5 ஆவணங்கள் ஆகியவற்றையும் சேர்த்து 1.திரு.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 2. திரு.சபரிசெல்வம், ஒப்பந்த பணியாளர், தனிநபர்கள் 3. திரு.M.கோவிந்தராஜன், 4. திரு.M.பெருமாள், 5. திரு.S.வெங்கடேஷ், 6. திரு.V.தினேஷ்குமார், 7. திரு.M.மாரிச்சாமி மற்றும் 8. திரு.M.லட்சுமணன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புநர் திரு.சு.கருப்பசாமி, (46/2024) த/பெ.சுந்தரமகாலிங்கம், தனி வட்டாட்சியர் (நி.எ.), மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.10.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் L. RAJU......
Rank: நிலை DSP..........No. எண் .........

விருதுநகர் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.13/2024 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் விருதுநகர் மாவட்டம், மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1,தனி வட்டாட்சியர் (நி.எ.) ஆககடந்த 09.08.2024ஆம் தேதி முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 01.10.2024ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். இன்று 16.10.2024ஆம் தேதி சுமார் 10.30 மணியளவில் விருதுநகர் மாவட்டம், மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1,தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, சிறப்பு பதிவெண் வழங்குவது, வாகன உரிமம் புதுப்பித்தல், உரிமையாளர் பெயர் மாற்றம் செய்வது மற்றும் வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், அந்த லஞ்ச பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாக சேகரித்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த லஞ்ச பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கொடுப்பதாகவும், விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.டீராஜு மற்றும் காவலர்களுடன் மேற்படி விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இணை ஆய்வு செய்ய இன்று 16.10.2024ஆம் தேதி சுமார் 11.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு சென்று விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சுமார் 12.45 மணிக்குச் சென்று 20.00 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின் போது ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம் என்பவரிடம் ரூ.11,500/-ம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன் என்பவரிடம் ரூ.21,900/-ம், திரு.M.பெருமாள் என்பவரிடம் ரூ.20,220/-ம், திரு.S.வெங்கடேஷ் என்பவரிடம் ரூ.6,500/-ம், திரு.V.தினேஷ்குமார்

என்பவரிடம் ரூ.5,000/-ம், திரு.M.மாரிச்சாமி என்பவரிடம் ரூ.4,100/-ம் மற்றும் திரு.M.லட்சுமணன் என்பவரிடம் ரூ.1,300/-ம் இருப்பது தெரியவந்தது. மேற்படி 7 நபர்களும் அவர்களிடமிருந்த பணத்திற்கான தகுந்த முகாந்திரம் கூறவில்லை. ஆகவே மேற்படி 7 நபர்களிடம் இருந்த தொகை மொத்தம் ரூ.1,00,620/- சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கொடுப்பதற்காக பொதுமக்களிடம் வசூல் செய்த பணம் எனக்கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.கார்த்திகேயன், ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன், திரு.M.பெருமாள், திரு.S.வெங்கடேஷ், திரு.V.தினேஷ்குமார், திரு.M.மாரிச்சாமி மற்றும் திரு.M.லட்சுமணன் ஆகியோர்கள் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் இன்று 16.10.2024ம் தேதி பிற்பகல் 12.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. திடீர் இணை ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள், 1. ஆய்வு செய்த இடம் மற்றும் அலுவலகம் : வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம். 2. ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்: 16.10.2024 ஆம் தேதி சுமார் 12.45 மணியளவில், 3. ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் : திரு.சு.கருப்பசாமி (46/2024), த/பெ.சுந்தரமகாலிங்கம், தனி வட்டாட்சியர் (நி.எ.), மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர். 4. ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்கள் : 1) திரு.T.ராஜு, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். 5.ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த அரசு அலுவலர்கள் 1) திரு.S.கார்த்திகேயன் (48/2024), மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 2) திரு.பாண்டியன் (49/2024), கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 3) செல்வி.M.ஜெகதாம்பிகை (37/2024), கணக்காளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 4) திரு.N.சரவணன் (48/2024), A2 பிரிவு உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 5) திரு.R.ஸ்ரீராமன் (26/2024), உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 6) திருமதி.R.ரம்யா, (37/2024), இளநிலை உதவியாளர், B2 Maxi cab Section, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 7) திருமதி.I.மீனாட்சி (29/2024), இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 8) செல்வி.S.கனிமொழி (27/2024), தட்டச்சர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 9) திரு.தா.சபரிசெல்வம் (45/2024), ஒப்பந்த பணியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, வீட்டு முகவரி.எண்.2/1963, இந்திரா நகர், விஸ்வநத்தம், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்,10)

திருமதி.G.முத்துசெல்வி (33/2024), க/பெ.லோகேஸ்வரன், Data Entry Operator, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, வீட்டு முகவரி. எண்.2/99, தேவர் சிலை, முதலிப்பட்டி, சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம். 6. ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த தனிநபர்கள் : 1) திரு.M.கோவிந்தராஜன் (44/2024), த/பெ.மாரியப்பன், கதவு எண்.2/1/540-C, முனீஸ் நகர், ஆனையூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். 2) திரு.M.பெருமாள் (43/2024), த/பெ.முருகேஷன், கதவு எண்.1/1A, வடக்கு தெரு, V.முத்துலிங்காபுரம், விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம், 3) திரு.S.வெங்கடேஷன் (43/2024), த/பெ.சீனிவாசன், கதவு எண்.1/89, E.குமாரலிங்கபுரம், நடுவப்பட்டி அஞ்சல், சாத்தூர் தாலுகா, விருதுநகர் தாலுகா,விருதுநகர் மாவட்டம், 4) திரு.V.தினேஷ் குமார் (32/2024), த/பெ.வரதராஜன், கதவு எண்.1/24, E.குமாரலிங்கபுரம், நடுவப்பட்டி அஞ்சல், சாத்தூர் தாலுகா, விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம், 5) திரு.M.மாரிச்சாமி (37/2024), த/பெ.முருகன், கதவு எண்.1/82, வடக்கு தெரு, ஆனைகுட்டம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 6) திரு.M.லட்சுமணன் (31/2024), த/பெ.முத்தழகப்பன், கதவு எண்.1/587, N.G.O.காலனி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 7) திரு.G.மனோராஜ் (18/2024), த/பெ.கணேசன், கதவு எண்.4/185, வடக்கு தெரு, அம்மாப்பட்டி, துரைச்சாமிபுரம், மம்சாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம், 8) திரு.M.முருகேஸ்வரன் (48/2024), த/பெ.முத்தையா நாடார், கதவு எண்.725/G-3-1. ஸ்டாண்டர்டு காலனி, திருத்தங்கல், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம், 9) திரு.M.அங்காளேஸ்வரன் (31/2024), த/பெ.மாரிக்கண்ணன், கதவு எண்.2/2337/12, காயம்பு நகர், சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 10) திரு.V.ஆனந்த் (29/2024), த/பெ.வெங்கட்ராஜ், கதவு எண்.2/197, தெற்கு தெரு, சின்னகாமன்பட்டி, சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம், 11) திரு.B.சரவணக்குமார் (23/2024), த/பெ.பாலசுப்பிரமணியன், கதவு எண்.3/155, தெற்கு தெரு, செவல்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 12) திரு.S.காமராஜ் (60/2024), த/பெ.சுப்பையா, கதவு எண்.2/2067, விநாயகர் காலனி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்,13) திரு.S.மணிராஜ் (24/2024), த/பெ.சுரேஷ், புதுவிளாங்குடி, மதுரை, 14) திரு.V.காளிராஜன் (29/2024), த/பெ.வீரபாண்டி, கதவு எண்.11-A, பிச்சைப்பாண்டி தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 15) திரு.J.ராஜா (34/2024), த/பெ.ஜோசப் மனோகரன், கதவு எண்.4/135, பொங்கலாபுரம், சித்துராஜபுரம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 16) திரு.G.கண்ணன் (43/2024), த/பெ.கோபால்சாமி, கதவு எண்.6/630-1, பாலாஜி நகர் மேற்கு, சித்துராஜபுரம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 17) திரு.M.ரத்தினகுமார் (31/2024), த/பெ.மகாலிங்கம், கதவு எண்.9/729, காந்தி நகர், சிலோன் காலனி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம், 18) திரு.N.மகேஸ்வரன் (31/2024), த/பெ.நாராயணன், கதவு எண்.4/1692-1C , அம்மன் நகர், புதூர் ரோடு, நாரணாபுரம்,

சிவகாசி, விருதுநகர் மாவட்டம். சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I என்பவர், தனது அலுவலகத்தில் வரும் பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, சிறப்பு பதிவெண் வழங்குவது, வாகன உரிமம் புதுப்பித்தல், உரிமையாளர் பெயர் மாற்றம் செய்வது மற்றும் வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், அந்த லஞ்ச பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாக சேகரித்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த லஞ்ச பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கொடுப்பதாகவும் கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட காவல்துறை மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உத்தரவுப்படியும் இன்று 16.10.2024ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கலம்-3-ல் சொல்லப்பட்ட அதிகாரிக்கு இத்தகவலை தெரிவித்தும், அதன்படி விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்த திரு.கருப்பசாமி, தனி வட்டாட்சியர், காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் சகிதம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அலுவலக வாகனம் மற்றும் தனிநபர் வாகனங்களில் புறப்பட்டு, திருத்தங்கல் வழியாக சிவகாசியில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலக வளாகம் வந்து, வாகனங்களை கிழக்குப்பக்கத்தில் ஓரமாக நிறுத்திவிட்டு, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தெற்குப்பார்த்த பிரதான வாசல் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே நின்றுகொண்டிருந்த கலம்-6-ல் கண்ட நபர்களை அங்கேயே அமருமாறு அறிவுறுத்திவிட்டு, அவர்கள் வெளியே செல்லாமல் கண்காணிக்குமாறு காவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. பின்னர் அங்கிருந்தவர்களிடம் விசாரிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் இவ்வலுவலகத்தின் தென்கிழக்கு மூலையில் அமர்ந்திருந்த கலம்-5 வரிசை எண்.1-ல் கண்ட திரு.கார்த்திகேயன் அவர்களிடம், விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும், விருதுநகர் மாவட்ட லஞ்சஒழிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களையும், லஞ்சஒழிப்புத்துறை காவல் ஆய்வாளர் அவர்களையும் மற்றும் உடன் இருந்தவர்களை குழுவினர் என்றும் அறிமுகம் செய்துகொண்டு திடீர் சோதனை செய்யவிருப்பதாக சொல்லி, திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் வாசலில் நுழைந்ததும் வலதுபுறமாக இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.கார்த்திகேயன் அவர்களிடம் விசாரிக்க, இன்றைய தற்போது வரைக்குமான கட்டண வசூல் விவரம் அலுவலக கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் அவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ளலாம் என தெரிவித்தார். எனவே மேற்படி வாகன மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்களும் சேர்ந்து இவ்வலுவலகத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கண்காணிப்பாளர்

திரு.பாண்டியன் அவர்களை சந்தித்து, இன்றைய தின கட்டண வசூல் விவரம் கேட்க, அதற்கு அவர் அவரது கணினியிலிருந்து இன்றைய கட்டண வசூல் விவரத்தை பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட சிறப்பு எண் பதிவு தொடர்பாக ரூ.57,940/-, சாலை வரியாக ரூ.1,19,436/-, Road Tax Sur Charge ரூ.3,440/-, பசுமை வரியாக ரூ.13,750/-, சாலை பாதுகாப்பு வரி ரூ.375/-, இணக்ககட்டணமாக ரூ.15,800/-, சேவை வரியாக ரூ.4,435/-, சேமநல வரியாக ரூ.1,230/- ஆக மொத்தம் ரூ.2,16,406/- மொத்த கட்டண வசூல் இணைய வழியில் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் அவர்களை விசாரிக்க இவ்வலுவலகத்தில் எந்தவொரு கட்டணமும் பணமாக வசூலிக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார். மேற்படி கண்காணிப்பாளரிடம் கேட்டுக்கொண்டபடி, அவர் எடுத்து ஆஜர் செய்த அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட, அதில் முந்தைய தினம் 15.10.2024ஆம் தேதி வரை ரூ.2,56,48,552/- கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், இன்று (16.10.2024) ரொக்கம் கையிருப்பு எதுவும் இல்லையென்று குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது. அதன் கீழே கணக்காளர் செல்வி.ஜெகதாம்பிகா சுருக்கொப்பம் செய்து, தேதியிட்டுள்ளார். ஆனால் வட்டார போக்குவரத்து அலுவலர் (கூடுதல் பொறுப்பு) அவர்கள் தனது கையொப்பம் செய்யவில்லை. மேலும் கணக்காளர் செல்வி.ஜெகதாம்பிகா என்பவரிடம் கொடிநாள் தொகை வசூல் செய்யப்படுகிறதா? என கேட்டபோது, தங்கள் அலுவலகத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ.4,00,000/- என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும், இதுநாள் வரை ரூ.1,46,601/- வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த தொகை ஆன்லைன் மூலம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், ரொக்கப்பணமாக வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். மேலும் தற்போது இவ்வலுவலகத்திற்கு நிரந்தர வைப்புத்தொகை எதுவும் இல்லை எனவும் கணக்காளர் செல்வி.ஜெகதாம்பா என்பவர் தெரிவித்தார். தொடர்ந்து நாங்கள் கேட்டுக்கொண்டபடி, கலம்-5 வரிசை எண்.1-ல் கண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.S.கார்த்திகேயன், தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்றும், தான் தினமும் சங்கரன்கோவிலை சேர்ந்த திரு.சங்கரநாராயணன் என்பவருக்கு சொந்தமான TN 79 E 5727 DATSUN என்ற காரில் மதுரையிலிருந்து புறப்பட்டு சிவகாசியிலுள்ள தன்னுடைய அலுவலகத்திற்கு வந்து செல்வது வழக்கம் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து கலம்-5 வரிசை எண்.2 முதல் 8 வரையுள்ள அரசு அதிகாரிகளிடம் தங்களிடமுள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்க, 2)கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் அவர்களிடம் ரூ.264/-, 3) செல்வி.ஜெகதாம்பிகா என்பவரிடம் ரூ.730/-, 4) உதவியாளர் திரு.சரவணன் அவர்களிடம் ரூ.680/-, 5)உதவியாளர் திரு.ஸ்ரீராமன் அவர்களிடம் ரூ.405/-, 6) கணக்காளர் இளநிலை உதவியாளர் திருமதி.ரம்யா அவர்களிடம் ரூ.1,000/-, 7)இளநிலை உதவியாளர் திருமதி.மீனாட்சி அவர்களிடம் ரூ.1,455/- மற்றும் 8) தட்டச்சர் செல்வி.கனிமொழி அவர்களிடம் ரூ.1,765/- இருப்பதாக சொல்லி எடுத்து ஆஜர் செய்து,

அவை தங்களது சொந்தப்பணம் என தெரிவித்தார்கள். மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அலுவலக பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு 2024-ஐ கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் மூலமாக பெற்று பார்வையிட, அதில் 16.10.2024ஆம் தேதி உதவியாளர் ஸ்ரீதேவி என்பவரிடம் ரூ.870/- எனவும் (இந்த நடவடிக்கைகளின்போது இவர் சிவகாசி நீதிமன்றம் சென்றிருப்பதாக தெரியவந்தது), உதவியாளர் திரு.ஸ்ரீராமன் என்பவரிடம் ரூ.405/-, தட்டச்சர் செல்வி.கனிமொழி என்பவரிடம் ரூ.1,765/-, இளநிலை உதவியாளர் திருமதி.ரம்யா என்பவரிடம் ரூ.1,000/-, இளநிலை உதவியாளர் திருமதி.மீனாட்சி என்பவரிடம் ரூ.1,455/-, உதவியாளர் திரு.சரவணன் என்பவரிடம் ரூ.700/-, கணக்கர் செல்வி.ஜெகதாம்பா என்பவரிடம் ரூ.750/-, கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் என்பவரிடம் ரூ.320/-, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.கார்த்திகேயன் என்பவரிடம் பணம் எதுவுமில்லை என குறிப்பிட்டு, ஒவ்வொருவரும் தங்களது சுருக்கொப்பம் செய்துள்ளார்கள். அதன் கீழே கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் மற்றும் உதவியாளர் திரு.சரவணன் ஆகியோர் கீழ்ஒப்பம் செய்துள்ளார்கள். கணக்கர் செல்வி.ஜெகதாம்பிகா மற்றும் கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் ஆகியோரிடம் தலா ரூ.20/- மற்றும் ரூ.56/- குறைவாக இருப்பு உள்ளது. இதுபற்றி இவ்விருவரிடமும் கேட்க, அதற்கு அவர்கள் தாங்கள் டீ மற்றும் உணவுக்காக செலவு செய்ததாக தெரிவித்தார்கள். எனவே மேற்படி அரசு ஊழியர்கள் தங்கள் கைவசமிருந்த தொகைகளுக்கு சரியான விளக்கம் சொன்னபடியால், மேற்படி தொகைகள் அவரவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதேபோல் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களது அலுவலக அறையின் வடபக்கம் அமைந்துள்ள புகைப்படம் எடுக்கும் அறையை சோதனை செய்ய, அங்கிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அங்கு பணியிலிருந்த ஒப்பந்த பணியாளர்கள் கலம்-5 வரிசை எண்.9-ல் கண்ட திரு.சபரிசெல்வம் மற்றும் கலம்-5 வரிசை எண்.10-ல் கண்ட திருமதி.முத்துசெல்வி ஆகியோர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திரு.சபரிசெல்வம் ரூ.11,500/- (ரூ.500 X 23) எடுத்து ஆஜர் செய்தார். இப்பணம் பற்றி அவரிடம் கேட்க, அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே இப்பணம் ரூ.11,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஒப்பந்த பணியாளர் திருமதி.முத்துசெல்வி தன்னிடமிருந்த ரூ.190/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என தெரிவித்ததால், அந்த பணம் ரூ.190/- ஆனது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ஒப்பந்த பணியாளர்களுக்கு பணம் கையிருப்பு பதிவேடு எதுவும் பராமரிக்கப்படுகின்றனவா என கேட்டபோது, அவ்வாறு ஒப்பந்த பணியாளர்களுக்கு பதிவேடு எதுவும் பராமரிக்கப்படவில்லை என தெரிவித்தார்கள். தொடர்ந்து இவ்வலுவலகத்தின் பிரதான அறையில் அமர வைக்கப்பட்டிருந்த கலம்-6 வரிசை எண்.1 முதல் 6 வரையிலான தனிநபர்களிடம் தங்களிடமிருக்கும் பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்க, திரு.M.கோவிந்தராஜன் தன்னிடமிருந்த ரூ.21,900/- (1) Rs.500 X 11 =

Rs.5,500/-, 2) Rs.500 X 9 = Rs.4,500/-, 3) Rs.500 X 7 = Rs.3,500/-, 4) Rs.500 X 4 = Rs.2,000/-, 5) Rs.500 X 4 = Rs.2,000/-, 6) Rs.500 X 3 = Rs.1,500/-, 7) Rs.500 X 2 = Rs.1,000/-, 8) Rs.500 X 1 = Rs.500/-, 9) Rs.500 X 2 = Rs.1,000/-, Rs.200 X 1 = Rs.200/- Rs.100 X 2 = Rs.200/- ஆகிய 9 பணக்கத்தைகளையும், திரு.M.பெருமாள் தன்னிடமிருந்து ஆஜர் செய்த குறிப்புகள் எழுதப்பட்ட 20 X 14 செ.மீ. அளவுள்ள இரண்டு வெள்ளைத்தாள்களால் சுருட்டப்பட்ட ஒரு பண்டலிலிருந்து ரூ.20,220/- (Rs.500 X 40, Rs.200 X 1, Rs.20 X 1)ஐயும், திரு.S.வெங்கடேஷ் தன்னிடமிருந்து ரூ.6,500/- (Rs.500 X 13)ஐயும், திரு.V.தினேஷ்குமார் தன்னிடமிருந்து ரூ.5,000/- (Rs.500 X 10)ஐயும், திரு.M.மாரிச்சாமி தன்னிடமிருந்து ரூ.4,100/- (Rs.500 X 8, Rs.100 X 1)ஐயும், திரு.M.லட்சுமணன் தன்னிடமிருந்து ரூ.1,300/- (Rs.500 X 2, Rs.200 X 1, Rs.100 X 1)ஐயும் எடுத்து ஆஜர் செய்தார்கள். இந்த தொகைகள் பற்றி மேற்கூறிய நபர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி தொகைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.M.பெருமாள் ஆஜர் செய்த குறிப்புகள் எழுதப்பட்ட இரண்டு வெள்ளைத்தாள்களில் ஒரு வெள்ளைத்தாளில் இடதுபக்கத்தில் Duplicate F/s TN 96 D 4350 என எழுதி அதற்கு கீழே Venkat Car RC-1000 67P1770 என்றும், அதற்கு கீழே NCP-300 69 BQ 6064 என்றும், அதற்கு கீழே M/Cab-3000 34 AY 1321 என்றும், அதற்கு கீழே Anand என்றும், அதற்கு கீழே Car RC-1000 67 AY 8077 என்றும், அதற்கு கீழே Bai என்றும், அதற்கு கீழே HGV-3000 64U0480 என்றும், அதற்கு கீழே MGV-500 74BE3613 என்றும், அந்த வெள்ளைத்தாளின் வலதுபக்கம் 16.10.2024 என்றும், அதற்கு கீழே Pandi என்றும், அதற்கு கீழே CarRCTO-2800 31G0401 என்றும், அதற்கு கீழே MICRC-500 67 AY 3382 என்றும், அதற்கு கீழே Varadharaj என்றும், அதற்கு கீழே M/CRC-500 67 R 7794 என்றும், அதற்கு கீழே மகேந்திரன் என்றும், அதற்கு கீழே NCP-300 95C2613 என்றும், அதற்கு கீழே NCP-300 95A1118 என்றும், அதற்கு கீழே Selvi என்றும், அதற்கு கீழே NCP-300 76 AA 0627 என்றும் எழுதப்பட்டிருந்தது. அதனுடன் இருந்த மற்றொரு வெள்ளைத்தாளின் இடதுபக்கம் Bai என்றும், அதற்கு கீழே LCar 6+1=7-6=13 என்றும், அதற்கு கீழே NCP 10+1=11-6=17 என்று எழுதி, அதில் குறுக்காக கோடுபோடப்பட்டுள்ளது, அதற்கு கீழே மகேந்திரன் NCP 10+1=11-6=17 என்று எழுதி அதில் குறுக்காக கோடுபோடப்பட்டு, கோட்டின் முடிவில் 1900 என்று எழுதியும், அதற்கு கீழே Vidi என்றும், அதற்கு கீழே HSV 17-11=18-6=24 என்றும், அதற்கு கீழே Amse என்றும், அதற்கு கீழே NCP 5+1=6-6=12 CTR என்றும் அதனருகில் 5என்ற எண்ணை வட்டமிட்டும், அதற்கு கீழே Dinesh என்றும், அதற்கு கீழே NCP 5+1=6 என்றும், அதற்கு கீழே LCV 6+1=7-6=13 என்றும், அதற்கு அருகில் 6 என்றும் அதற்கு கீழே 13 என்றும், அதற்கு கீழே கோடு போட்டு 19+21= என்று எழுதி, அதனருகில்

40 என்று எழுதி வட்டமிடப்பட்டும், அதற்கு கீழே TDI minibus 10+1=11-6=17 என்றும் எழுதி, அதற்கு கீழே தாளின் இறுதியில் மணி to மகேஷ் } 7700- 280010500 என்று எழுதப்பட்டுள்ளது. அந்த தாளின் வலதுபக்கம் மேல்புறத்தில் 15/10/24 என்றும், அதற்கு கீழே Venkat MGN 8+1=9-6=15 A1+ 25 என்றும், அதற்கு கீழே M/Cab 50+1=51-6=57 என்றும், அதனருகில் இடைவெளி விட்டு 57 என்றும், அதற்கு கீழே M/Cab 50+1=51-6=57 என்றும், அதனருகில் இடைவெளி விட்டு 57 என்றும், மேற்படி 25, 57, 57 ஆகிய எண்களுக்கு நேராக 139 என்றும், அதற்கு கீழே 3 என்றும் கோடுபோட்டு 14200 என்றும் எழுதப்பட்டு, மேற்படி Venkat என்று எழுதியதில் குறுக்காக கோடு போடப்பட்டும், அதற்கு கீழே மகேஷ் A/R-600- என்றும், அதற்கு கீழே முருகன் என்றும், அதனருகில் 99 என்றும் அதற்கு கீழே 70 என்றும் அதற்கு கீழே கோடு போட்டு 2900 என்றும், அதற்கு கீழே A/R-300 CIR என்றும், அதனருகில் 1 என்ற எண்ணை வட்டமிட்டும் Late 6 months 11 என்றும், அதற்கு கீழே A/R-600 Late 6 months 9 என்றும், அதற்கு கீழே கோடு போட்டு 20 என்றும் எழுதப்பட்டு, மேற்படி முருகன் என்று எழுதியிதிலிருந்து குறுக்காக கோடு போடப்பட்டு அதற்கு கீழே Ashok என்று எழுதி, அதற்கு கீழே 3 என்ற எண் எழுதி அதில் வட்டமிடப்பட்டு, அதற்கு கீழே MEW 9+6=15 CIR என்று எழுதி, அதனருகில் 1 என்ற எண் எழுதி அதில் வட்டமிடப்பட்டும், அதனருகில் RTO Office என்றும், அதற்கு கீழே MCV 16+1=17-6=23 CFR என்று எழுதி, அதனருகில் 7 என்ற எண் வட்டமிடப்பட்டும், அதற்கு கீழே HCV 16+1=17-6=23 CFR என்று எழுதி, அதனருகில் 9 என்ற எண் வட்டமிடப்பட்டும், அதற்கு கீழே Guna NCP 10+1=11-6=17 CFR என்று எழுதி, அதனருகில் 4 என்ற எண் வட்டமிடப்பட்டும், அதற்கு கீழே Late 6 months 32 என்றும், அதற்கு கீழே 46 என்றும், அதற்கு கீழே 32 என்றும், கோடு போட்டு 78 என்றும், அதற்கு கீழே கோடு போடப்பட்டும், அதற்கு கீழே தாளின் மேலிருந்து கீழாக 9629383082 என்றும் அதன் கீழே கடைசியில் 35 என்றும், அதற்கு கீழே 23 என்றும், அந்த எண்ணிற்கு கீழே கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 45 என்றும், அந்த எண்ணிற்கு கீழே 23 என்றும் எழுதி, அதற்கடுத்து கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 68 என்று எழுதி கோடு போடப்பட்டும் எழுதப்பட்டிருந்தது. அதே வெள்ளைத்தாளின் மற்றொரு பக்கத்தின் இடதுபக்கம் Seeni என்றும், அதற்கு கீழே HGV-500 16K1617 என்றும், அதற்கு கீழே M/CRC-500 67AY 4753 என்றும், அதற்கு கீழே T Taxn-300 38CV 2749 என்றும், அதற்கு கீழே முருகன் என்றும், அதற்கு கீழே CarRC-1000 67AY9999 என்று எழுதி, அதன் குறுக்கே கோடு போடப்பட்டு, அந்த கோட்டின் மேல்பக்கம் 20 என்றும், அதற்கு கீழே 10 என்றும், அதற்கடுத்து கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 30 என்றும், அதற்கு கீழே 69 என்றும், அதற்கடுத்து கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 99 என்றும், அதற்கு கீழே 90 என்றும், அதற்கடுத்து கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 2900 என்றும், அதற்கு கீழே Pandi A/R- 300 84X0111

என்றும், அதற்கு கீழே M/C RC-500 67 R 7555 என்றும், அதற்கு கீழே மகேஷ் என்றும், அதற்கு கீழே CarRC-1000 72AX0254 என்றும், அதற்கு கீழே NCP-300 49BD 6760 அதற்கு அடுத்து தாளின் கீழே இறுதிப்பகுதியில் 20000- என்றும், அதற்கு கீழே 8200- என்றும், அதற்கு கீழே 5000- என்றும், அதற்கடுத்து கீழே கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 33200 என்றும், அதற்கு கீழே 6800 மணி அண்ணா என்றும், அதற்கு கீழே கோடு போடப்பட்டும், அதற்கு கீழே 40000 என்றும் எழுதி அதற்கு கீழே கோடு போடப்பட்டுள்ளது. அந்த தாளின் அதே பக்கத்தின் வலதுபக்கம் 15/10/24 என்றும், அதற்கு கீழே Ashok என்றும், அதற்கு கீழே M/CRC-500 67AY3984 என்றும், அதற்கு கீழே M/CRC-500 67R8950 என்றும், அதற்கு கீழே CarRC-1000 67AY7563 M/CRC-500 67AY3984 என்றும், அதற்கு கீழே Venkat என்றும், அதற்கு கீழே Ttaxi-300 19AK7942 என்றும் எழுதி, மேற்படி Venkat என்று எழுதிப்பட்டதிலிருந்து குறுக்காக கோடு போடப்பட்டும், அதற்கு கீழே மகேந்திரன் என்றும், அதற்கு கீழே M/Cab-3000 37CH 2605 என்று எழுதி, அதில் குறுக்காக கோடு போடப்பட்டும், அந்த கோட்டின் மேல்பக்கம் 190075 என்றும், அதற்கு கீழே 47 என்றும், அதற்கடுத்து ஒரு கோடு போட்டு 119 என்றும், அதற்கடுத்து கோடு போடப்பட்டும், அதற்கு கீழே Vidi Car RC-1000 67AY 7725 என்றும் எழுதி, அதற்கு கீழே மேலிருந்து கீழாக 9442172120 என்றும், அதற்கு கீழே 54400 என்றும், அதற்கு கீழே 25 என்றும், அதற்கு கீழே கோடு போடப்பட்டு 54400 என்றும் எழுதி கோடு போடப்பட்டும், அதற்கு கீழே இடதுபக்கத்தில் 69800 என்றும், அதற்கு கீழே 9100 என்றும், அதற்கடுத்து கோடு போடப்பட்டு 15900 என்று எழுதி, அதற்கடுத்து கோடு போடப்பட்டும், வலதுபக்கத்தில் மேலிருந்து கீழாக 90875 என்றும், அதற்கடுத்து கீழே 35676 என்றும் எழுதப்பட்டுள்ளது. மேலும் அலுவலகத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி தனிநபர்களுடைய வாகனங்களை சோதனை செய்ய, மேற்சொன்ன திரு.M.பெருமாள் என்பவருடைய Hero Splender plus இருசக்கர வாகனம், TN 67 BH 1099-ன் சைடு பாக்ஸில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கத்தை பணத்தாள்களை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ஒரு கத்தையில் ரூ.25,100/- (Rs.500 X 50, Rs.100 X 1)ஐயும், மற்றொரு கத்தையில் ரூ.5,000/- (Rs.500 X 9, Rs.200 X 1, Rs.100 X 3)ஐயும் ஆக ரூ.30,100/- திரு.M.பெருமாள் என்பவரின் இருசக்கர வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தொகை பற்றியும், மேற்படி திரு.பெருமாள் என்பவரிடம் கேட்க, அவரால் தகுந்த முகாந்திரம் கூறமுடியவில்லை. எனவே இந்த பணமும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆக இச்சோதனையின்போது இவ்வலுவலகத்திலிருந்து கணக்கில் வராத பணம் ரூ.1,00,620/- (ரூ.70,520/-+ ரூ.30,100/-) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து கலம் 6 வரிசை எண்.7 முதல் 18 வரையிலான தனிநபர்களிடம் விசாரிக்க, 7) திரு.G.மனோராஜ் தன்னிடமிருந்த ரூ.10/-யும், 8) திரு.M.முருகேஸ்வரன் தன்னிடம் பணம் எதுவும் இல்லை

எனவும், 9)திரு.M.அங்காளேஸ்வரன் தன்னிடமிருந்த ரூ.300/-யும், 10) திரு.V.ஆனந்த் தன்னிடம் பணம் எதுவும் இல்லை எனவும், 11) திரு.B.சரவணக்குமார் தன்னிடமிருந்த ரூ.250/-, 12)திரு.S.காமராஜ் தன்னிடமிருந்த ரூ.50/-யும், 13) திரு.S.மணிராஜ் தன்னிடமிருந்த ரூ.200/-யும்,14) திரு.V.காளிராஜன் தன்னிடமிருந்த ரூ.500/-யும், 15) திரு.J.ராஜா தன்னிடமிருந்த ரூ.30/-யும், 16) திரு.G.கண்ணன் தன்னிடமிருந்த ரூ.75/-யும், 17) திரு.M.ரத்தினகுமார் தன்னிடமிருந்த ரூ.1,070/-யும் மற்றும் 18) திரு.N.மகேஸ்வரன் தன்னிடமிருந்த ரூ.25/-யும் எடுத்து ஆஜர் செய்து, அது தங்களது சொந்தப்பணம் என தெரிவித்தபடியால், மேற்படி தொகைகள் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவ்வலுவலக கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் என்பவரிடமிருந்து Movement Register-ஐ பெற்று பார்வையிட, உதவியாளர் திருமதி.ஸ்ரீதேவி என்பவர் காலை 11.00 மணிக்கு சிவகாசி நீதிமன்றம் சென்றதாக குறிப்பு உள்ளது. மேலும் அலுவலர்களின் வருகை பதிவேடு மற்றும் ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவேடு ஆகியவற்றை பார்வையிட 16.10.2024ஆம் தேதிக்கான வருகை விவரத்தை சரிபார்த்து பொறுப்பு அதிகாரியான கண்காணிப்பாளர் திரு.பாண்டியன் அவருடைய ஒப்புகை கையொப்பம் செய்யவில்லை. ஆகையால் கலம் 5 வரிசை எண்.1 மற்றும் 9-ல் கண்ட அரசு அலுவலர்கள் மற்றும் கலம் 6 வரிசை எண்.1 முதல் 6 வரையிலான தனிநபர்கள் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. அவர்கள் இந்த திடீர் சோதனையின்போது தங்கள் கைவசம் வைத்திருந்த தொகைகளுக்கு தகுந்த முகாந்திரம் கூறாத காரணத்தினால் மேற்படி தொகை ரூ.1,00,620/-யும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று 16.10.2024ஆம் தேதி 12.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 17.00 மணிக்கு முடிக்கப்பட்டு, திடீர் இணை ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் 20.00 மணிக்கு எழுதி முடிக்கப்பட்டது. எனவே 16.10.2024ஆம் தேதி எனது தலைமையில் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவல கட்டிட வளாகத்திற்குள் திடீர் இணை ஆய்வு சோதனையின் போது சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம் என்பவரிடமிருந்து ரூ.11,500/-ம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன் என்பவரிடமிருந்து ரூ.21,900/-ம், திரு.M.பெருமாள் என்பவரிடமிருந்து ரூ.20,220/-ம், திரு.S.வெங்கடேஷ் என்பவரிடமிருந்து ரூ.6,500/-ம், திரு.V.தினேஷ்குமார் என்பவரிடமிருந்து ரூ.5,000/-ம், திரு.M.மாரிச்சாமி என்பவரிடமிருந்து ரூ.4,100/-ம் மற்றும் திரு.M.லட்சுமணன் என்பவரிடமிருந்து ரூ.1,300/-ம் கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,00,620/-மும் பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக வசூல் செய்த பணத்தை ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன், திரு.M.பெருமாள், திரு.S.வெங்கடேஷ்,

திரு.V.தினேஷ்குமார், திரு.M.மாரிச்சாமி மற்றும் திரு.M.லட்சுமணன் ஆகியோர்கள் மூலமாக பெறுகிற லஞ்சப்பணம் என தெரியவந்ததால், சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.கார்த்திகேயன், ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன், திரு.M.பெருமாள், திரு.S.வெங்கடேஷ், திரு.V.தினேஷ்குமார், திரு.M.மாரிச்சாமி மற்றும் திரு.M.லட்சுமணன் ஆகியோர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கை, சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.கார்த்திகேயன், ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.சபரிசெல்வம், தனிநபர்களான திரு.M.கோவிந்தராஜன், திரு.M.பெருமாள், திரு.S.வெங்கடேஷ், திரு.V.தினேஷ்குமார், திரு.M.மாரிச்சாமி மற்றும் திரு.M.லட்சுமணன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,620/-, திரு.M.பெருமாள் ஆஜர் செய்த குறிப்புகள் மற்றும் எழுதப்பட்ட இரண்டு வெள்ளைத்தாள்கள் மற்றும் 5 ஆவணங்கள் ஆகியவற்றுடன் இன்று (16.10.2024) இரவு 11.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (sd) S.Karuppasamy, 16.10.2024 (சு.கருப்பசாமி) தனி வட்டாட்சியர் (நி.எ.) மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்.

Sir Received the complaint and registered a case in Virudhunagar V & AC Cr. No.13/2024 u/s 7 of PC Act 1988 as Amended in 2018 on 16.10.2024 at 23.30 hrs. The original F.I.R, complaint, Statements of Accused and two small bits of paper which were seized from A-4 Tr.Perumal during the Surprise Check are submitted to the Hon'ble CJM cum Special Judge for PC Act cases, Srivilliputhur and copies of this FIR forwarded to the concerned Superior Police Officers. (sd) L.Raju, 16.10.2024 (L.RAJU, DSP, V & AC, Virudhunagar)

Raju
DSP | V & AC
Virudhunagar
17.10.2024.